RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025



# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 57 | மார்ச்.5 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறுகிறது பாஜக" முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை



சென்னை: மார்ச்.5-

புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு 'கர்தவ்ய த்வார்' என்று இந்தியில் பெயர் வைக்கப்பட்டுள்ளதற்கு முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது பாஜக. 'மொழி ஒன்று வரிவடிவம் மூன்று' எனும் வகையில் இந்திப் பெயரையே தமிழ், ஆங்கிலத்திலும் எழுதி வைக்கும் இழிவான இந்தி திணிப்பு செயலில் இறங்கியுள்ளது ஒன்றிய பாஜக அரசு. திருச்சி மண்டல ரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் 'கர்தவ்ய த்வார்' என எழுதி வைத்துள்ளனர்.

வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களில் (ணிறிதிளி) ஏற்கெனவே 'பவிஷ்ய நிதி பவன்' என்ற பெயரைத் திணித்து விட்டனர்.

குற்றவியல் சட்டங்களுக்கும் சமஸ்கிருதப் பெயரைத்தான் ஆங்கில வரிவடிவத்தில் எழுதுகின்றனர்.

ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சகத்தின் பெயர் 'ஜல் சக்தி' ஆகிவிட்டது.

மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டப் பெயர் மாற்றத்திலும் இதே வேலையைத்தான் காட்டினார்கள்.

கொட்டமும், ஆணவமும் கூடிக்கொண்டே போகிறது. தமிழர்களின் சுயமரியாதையைச் சீண்டிப் பார்க்கும் இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

தமிழ், ஆங்கிலப் பெயர்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு, உடனடியாக அங்கு சரியான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற வேண்டும். இல்லையென்றால் தமிழர்களின் சூட்டை ஒன்றிய பாஜக அரசு உணர வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 'இந்தி பெயரான 'கர்தவ்ய த்வார்' என்கிற வாசகத்தை இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய எழுத்துகளைக் கொண்டு புரிந்துகொள்ள முடியாத வகையில் எழுதியுள்ளதைக் கண்டித்து திருச்சியில் திமுகவினர் இன்று முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி ஜங்ஷன் ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவாயில் முன்பு நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டத்தின்போது, நுழைவு வாயில் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு பெயின்ட் கொண்டு அழித்தனர். மத்திய அரசின் இந்தி திணிப்பு நடவடிக்கையைக் கண்டிப்பதாக கண்டன கோஷங்களை எழுப்பினர்.


இந்திய கம்யூ. கண்டனம்:

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், "பாஜக ஒன்றிய அரசு இந்தித் திணிப்பு நடவடிக்கையில் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. இதன் தொடர்ச்சியாக திருச்சி ரயில்வே கோட்ட அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு, அதன் முகப்பு நுழைவாயிலில் தமிழ், இந்தி, ஆங்கிலம் என மூன்று மொழி எழுத்துகளிலும் 'கர்தவ்ய த்வார்' என்ற இந்தி வார்த்தை எழுதப்பட்டுள்ளது.

திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகத்தின் இந்த இந்தி மொழித் திணிப்பு நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் தமிழ், ஆங்கிலம், இந்தி என மூன்று மொழிகளில் அந்தந்த இரயில் நிலையங்கள், சந்திப்புகள் என எல்லா இடங்களிலும் எழுதியுள்ள நிலையில், திருச்சி ரயில்வே கோட்ட அலுவலகம் இந்தி வார்த்தையை தமிழ் மற்றும் ஆங்கில மொழி வடிவில் எழுதியிருப்பது அப்பட்டமான இந்தி மொழித் திணிப்பாகும்.

திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகம் உடனடியாக, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ள இந்தி வார்த்தை வடிவத்தை அகற்ற வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இதில் அலட்சியம் காட்டப்படுமானால் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, பொதுமக்களை திரட்டி, நேரடிப் போராட்டத்தில் ஈடுபடும் என எச்சரிக்கிறது" என்று கூறியுள்ளார்.

## எம்எல்ஏ விடுதி பராமரிப்பு பணிக்கான டெண்டர் நடவடிக்கைகளை தொடர சென்னை ஐகோர்ட் அனுமதி



சென்னை: மார்ச்.5-

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள எம்எல்ஏ விடுதியில் பராமரிப்பு பணிகளுக்கான டெண்டர் நடவடிக்கைகளை தொடர அனுமதி அளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள எம்எல்ஏ விடுதியில் உள்ள அறைகள் பராமரிப்பு பணிகளுக்கு பொதுப் பணித் துறை டெண்டர் கோரியது. பிப்ரவரி 28ஆம் தேதி கோரப்பட்ட இந்த டெண்டர் படிவங்களை சமர்ப்பிக்க இரண்டு நாட்கள் மட்டும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

டெண்டர் கோரி விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள், பொதுப் பணித் துறை செயற்பொறியாளரிடம் தள ஆய்வு சான்றிதழ் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

சான்று கோரி விண்ணப்பித்தும் சான்று வழங்காததால், டெண்டர் நடைமுறைகளுக்கு தடை விதிக்கக் கோரி, ஒப்பந்ததாரர்கள் இருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு, நீதிபதி தண்டபாணி முன் விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்களுக்கு தள ஆய்வு சான்று வழங்கப்பட்டு விட்டதாக அரசுத்தரப்பில் ஆஜராகியிருந்த கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜி.ரவீந்திரன் தெரிவித்தார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, டெண்டர் நடவடிக்கைகளை தொடர அனுமதியளித்து, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

## 'பயிர்க் கடன் தள்ளுபடி முதல் படிப்புச் செலவு வரை' விஜய் பட்டியலிட்ட வாக்குறுதிகள்



சென்னை: மார்ச்.5-

'தவெக ஆட்சி அமைத்தால், 2 ஏக்கர் வரை உள்ள விவசாயிகளின் பிள்ளைகள் படிப்புச் செலவு ஏற்கப்படும்; 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை அமைக்கப்படும்; 5 ஏக்கர் வரை நிலமுள்ள விவசாயிகளின் பயிர்க் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும்" என்று அக்கட்சியின் தலைவர் விஜய் வாக்குறுதிகளைப் பட்டியலிட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே நடைபெற்ற தவெக நிர்வாகிகள் மற்றும் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அக்கட்சியின் தலைவர் விஜய் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் வெளியிட்ட வாக்குறுதிகள்:

› "உரம் பதுக்கி வைக்கப்படுவதாக செய்திகள் வெளியாகின. தவெக ஆட்சிக்கு வந்ததும் உரத் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

› 5 ஏக்கர் வரை நிலமுள்ள விவசாயிகளின் பயிர்க் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும். அதற்கு மேல் நிலமுள்ளவர்களுக்கு 50% வரை கடனை ரத்து செய்ய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உறுதியாக நடவடிக்கை எடுப்போம்.

திமுகவைப் போல அனைவருக்கும் என சொல்லிவிட்டு அதில் தகுதி பார்த்து பாகுபாடு காட்ட மாட்டோம். அனைத்தையும் வெளிப்படையாக அறிவிப்போம்.

› 2 ஏக்கர் வரை நிலமுள்ள விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்கள் குடும்பத்தில் யாரும் மாநில, ஒன்றிய அரசு ஊழியராக இல்லாமலிருக்கும் பட்சத்தில், அவர்களது பிள்ளைகளின் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழிற்கல்வி முதல் அனைத்து வகையான படிப்பின் முழு செலவுகளையும் அரசே ஏற்கும்.

› ஒன்றிய அரசு நெருக்கடியே கொடுத்தாலும் விவசாயிகளுக்கு எதிரான எந்த ஒரு திட்டத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்; முழுமையாக நிராகரிப்போம். விவசாயிகள் பக்கமே நமது ஆட்சி நிற்கும்.

› நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு பைசா கமிஷன் கூட வாங்காமல் பார்த்து கொள்ளப்படும். கமிஷன் வாக்குபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

› 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை அமைக்கப்படும். அரிசி தவிர்த்து மற்ற ரேஷன் பொருட்கள் பாக்கெட்டில் விநியோகிக்கப்படும்.

› கல்வி, மருத்துவம், ரேஷன், குடிநீர், பஸ் வசதி போன்ற அடிப்படை விஷயங்களுக்குதான் முதலில் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

› நமது குழந்தைகள், பெண்கள், இளைஞர்களின் வாழ்க்கைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

அரசு வேலை வாய்ப்புகள் மட்டுமல்லாமல் தனியார் வேலை வாய்ப்புகளுக்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும். அப்படி செய்துவிட்டால் அவர்களுக்கான ரூட்டை நமது இளைஞர்களே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

இத்தனை கோடி அத்தனை கோடி என விளம்பரம் மட்டும் செய்யாமல் உண்மையான ஒப்பந்தம் போட்டு வெள்ளை அறிக்கை வெளியிட்டு அதை செயல்படுத்தினாலே அனைத்தும் தன்னால் நடக்கும்" என்றார் விஜய்.

தஞ்சை மண்ணின் பெருமையை உணர்த்தும் விதமாக விஜய் பச்சை நிற துண்டு அணிந்திருந்தது கவனிக்கத்தக்கது.

பின்னர், 'எங்கள் ஓட்டு எங்கள் உரிமை, எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. எங்கள் ஓட்டு விசில் சின்னத்துக்குதான்; யாரையும் நம்பி ஏமாற மாட்டோம். எங்கள் வார்த்தையில் இருந்து மாற மாட்டோம், இது நிஜம்' என்ற உறுதிமொழியை தொண்டர்களை ஏற்க வைத்தார்.

## ஆங்காங்கே குண்டுகள், ஏவுகணைகள் வெடிக்கும் சத்தம்: துபாயில் இருந்து சென்னை திரும்பியவர்கள் பேட்டி



சென்னை: மார்ச்.5-

துபாயில் கணவருடன் வசித்து வந்த சென்னை பூந்தமல்லியை சேர்ந்த வைஜெயந்தி: இந்திய தூதரகம் மூலம் சென்னை வந்து சேர்ந்தது மகிழ்ச்சியாக உள்ளது. என்னுடைய கணவர் துபாயில் இருக்கிறார்.

அவரும் அடுத்த விமானத்தில், இங்கு வந்துவிடுவார். துபாயில் வீடுகளின் மேலேயே, விமானங்கள் பறந்து கொண்டு, பயங்கரமான சத்தமாக இருந்தது. 3 நாட்களாக இரவில் தூங்க முடியாமல் தவித்தோம். தற்போது பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டோம்.

துபாய் விமான நிலையத்தில் எந்தப் பகுதியில் தாக்குதல் நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் பதற்றமாகவும், பரபரப்பாகவும் இருந்தது. மின்சாரத்தை தடை செய்திருந்தார்கள். நாங்கள் இருளிலேயேதான், தவித்துக் கொண்டிருந்தோம். 3 நாட்களுக்கு பிறகு விமானத்தில் அமர்ந்ததும், நிம்மதியடைந்தோம்.

துபாய்க்கு சுற்றுலா சென்று சிக்கிய கோயம்பேட்டை சேர்ந்த கார்த்திக்: குடும்பத்துடன் துபாய்க்கு சுற்றுலா சென்றோம். கடந்த 28ம் தேதி சென்னைக்கு திரும்ப, துபாயிலிருந்து விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்திருந்தோம்.

அன்று மாலை, துபாய் விமான நிலையத்துக்கு வந்தபோது, போர் காரணமாக விமானம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தோம். பின்னர், துபாய் விமான நிலையத்துக்கு அருகே உள்ள ஒரு ஓட்டலில் தங்கினோம்.

அன்று இரவு முழுவதும் போர் விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே குண்டுகள், ஏவுகணைகள் வெடிக்கும் சத்தம் அதிகமாகக் கேட்டது. இதனால் நாங்கள் மிகுந்த அச்சம் அடைந்தோம்.

சென்னை திரும்ப ஒரு வாரம் ஆகும் என்று நினைத்தோம். அதனால், துபாயிலிருந்து மஸ்கட் செல்ல திட்டமிட்டோம். அப்போது தான் எமிரேட்ஸ் விமானம் சென்னைக்கு புறப்படுவதாக அறிவிப்பு வந்தது. அந்த விமானத்தில் நாங்கள் சென்னைக்கு வந்துவிட்டோம்.

விமானத்தில் எங்களை நன்றாக கவனித்துக் கொண்டனர். சுற்றுலா சென்ற நாங்கள் போர் சூழலில் சிக்கியது மிகவும் பயமாக இருந்தது. ஒரு வழியாக பத்திரமாக சென்னைக்கு திரும்பிவிட்டோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வருவாய் கிராம உதவியாளர்கள் தேர்வு முடிவு எப்போது? 3 மாதங்களாக காத்திருப்பு

தஞ்சாவூர்: மார்ச்.5-

தஞ்சாவூர் மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், வருவாய் கிராம உதவியாளர்கள் பணிக்கான எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு 3 மாதங்களான நிலையில் தேர்வு முடிவுவெளியிடப்படுவது எப்போது? என தேர்வர்கள் காத்திருக்கின்றனர்.

தமிழகம் முழுவதும் வருவாய்த் துறையில் காலியாக உள்ள வருவாய் கிராம உதவியாளர் (தலையாரி) காலிப் பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டன.

இதில், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் வட்டத்துக்கு 13, கும்பகோணம் 65, திருவையாறு 18, திருவிடைமருதூர் 33, பூதலூர் 19, பட்டுக்கோட்டை 28, ஒரத்தநாடு 34, பேராவூரணி 20, பாபநாசம் 55, திருவோணம் 20 பேர் என மொத்தம் 305 வருவாய் கிராம உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு 2025ம் ஆண்டு ஆக.1 முதல் 30ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பின்னர், அக்.15ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என காலநீட்டிப்பு செய்யப்பட்டது. இதற்கான கல்வித் தகுதி 10ம் வகுப்பு என்ற போதிலும், பட்டதாரிகள், பொறியாளர்கள் என உயர்கல்வி படித்த பலரும் அரசுப் பணி என்பதாலும், குறைந்த ஊதியம் என்றாலும், 10 ஆண்டுகள் கிராம உதவியாளராக பணியாற்றியவர்கள், கிராம நிர்வாக அலுவலராக பதவி உயர்வு பெறலாம் என்ற ஆசையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்த காலிப் பணியிடங்களுக்கு ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பித்தனர்.

இதையடுத்து, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு கடந்த ஆண்டு நவ.17 ம் தேதி நடைபெற்றது. ஆனால், தேர்வு முடிவு வெளியிடப்படவில்லை. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை காரணம் காட்டி தேர்வானோர் பட்டியல் வெளியிடப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக அதிகாரப்பூர்வமற்ற வகையில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழகம் முழுவதும் சிறப்பு தீவிர திருத்த இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.23ம் தேதி வெளியிடப்பட்டது. ஆனால், நேர்காணல் முடிந்து3 மாதங்களை கடந்த நிலையிலும், இதுவரை கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டோர் பட்டியல் வெளியிடப்படாமல் உள்ளது.

எனவே, அரசுப் பணி கனவில் தேர்வு எழுதி காத்திருக்கும் ஆயிரக்கணக்கானோர் கனவுகளை நனவாக்கும் வகையில், உடனடியாக தேர்வுப் பட்டியலை வெளியிட வேண்டும் என தேர்வு எழுதியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தேர்வு எழுதியவர்கள் கூறியது: தஞ்சாவூர் மாவட்டத்தில் 305 வருவாய் கிராம உதவியாளர் பணிக்கு பல்லாயிரக்கணக்கானோர் விண்ணப்பித்தனர். இதில் அதிகமாக பட்டப்படிப்பு படித்தவர்களும் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டனர். இதில், தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களின் பட்டியல் இறுதி செய்யப்பட்டுவிட்டது.

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை, தேர்தல் ஆணையம் வெளியிட்டால், தேர்வு செய்யப்பட்டோர் பட்டியல் வெளியிடப்படுவதில் சிக்கல் ஏற்படக்கூடும்.

எனவே, தஞ்சாவூர் ஆட்சியர், தமிழக முதல்வர் இப்பிரச்சினையில் கவனம் செலுத்தி, கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டோர் பட்டியலை உடனடியாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதுகுறித்து வருவாய்த் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, கிராம உதவியாளர்கள் பணியிடங்களுக்கான ஆட்களை தேர்வு செய்யும் அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன. விரைவில் அரசின் ஒப்புதல் பெற்று தேர்வானோர் பட்டியல் வெளியிடப்பட்டு, காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றனர்.



## நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு கலைக்கல்லூரியில் முதலாம் ஆண்டு விழா

நீலகிரி, மார்ச்.5-
நீலகிரி மாவட்டம் குன்னூரில் முதல் முறையாக தமிழக அரசின் சார்பில் தமிழக அரசு தலைமை கொறடாவின் விடா முயற்சி காரணமாக குன்னூர் தொகுதிக்குட்பட்ட குன்னூர் அரசு அண்ணா மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் அரசு கலைகல்லூரி கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு முடிவடையும் நிலையில் குன்னூர் அரசு கலைக்கல்லூரியில் மாணவர்கள் ஓராண்டு நிறைவு விழாவினை கொண்டாடினர்.

கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர் செண்பகவல்லி தலைமை தாங்கினார். கல்லூரியின் முதல்வர் சானியா வரவேற்றார்சிறப்பு விருந்தினர்களாக அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி சிறப்பாக படித்த முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி கௌரவித்தார் இந்த கல்லூரியின் புதிய கட்டிடம் பத்து ஏக்கர் பரப்பளவில் ரூ.8.2 கோடி செலவில் விரைவில் அமைக்கப்பட உள்ளது. இதற்கான பணிகள் குன்னூர் அருகே உள்ளே பந்துமை பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கல்லூரி அமைத்து கொடுத்த தமிழக முதலமைச்சருக்கு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நன்றி தெரிவித்தார் இந்த விழாவில் திமுக மாவட்ட பொறுப்பாளர் கே.எம். ராஜூ அமிர்தலிங்கம் கல்லூரி பேராசிரியர்கள் ஆசிரியைகள் மற்றும் மாணவி மாணவிகள் கலந்து கொண்டனர் விழாவில் கல்லூரி

பேராசிரியர் பாலா நன்றி கூறினார்

## நீலகிரி மாவட்டம் குன்னூர் ஸ்பிரிங்பீல்டு பகுதியில் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பட்டு உலகம் பொழுது போக்கு பூங்காவினை அரசு தலைமை கொறடா திறந்து வைத்து பார்வையிட்டார்

நீலகிரி மார்ச். 5-
நீலகிரி மாவட்டம் குன்னூர் ஸ்பிரிங்பீல்டு பகுதியில் பட்டு வளர்ச்சித்துறை சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பட்டு உலகம் பொழுது போக்கு பூங்காவினை, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அரசு தலைமை கொறடா அவர்கள் செய்தியாளர்களிடம்

தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பட்டுவளர்ச்சித்துறை சார்பில், நீண்ட காலமாக பட்டு பூச்சி மூலம் நூல் தயாரிக்கும் இடமாக இருந்து வந்த அரசு விதைப்பண்ணையில் 5 ஏக்கர் நிலத்தில்



முதற்கட்டமாக ரூ.75 இலட்சம் மதிப்பில் பட்டு உலகம் பொழுது போக்கு பூங்கா அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இங்கு நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களுக்கு பட்டு புழு வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், Soil to Silk திட்டத்தினை பிரதிபலிக்கும் வகையிலும், மல்பெரி நாற்றங்கால் உற்பத்தி முதல் பட்டு சேலை உற்பத்தி வரையிலான தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மல்பெரி நடவு செய்தல், பட்டு புழு வளர்ப்பு, பட்டுகூடு அறுவடை, பட்டு நூற்பு மற்றும் பட்டு நெசவு குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்படும், இதன் வாயிலாக மக்கள் பட்டு வளர்ப்பு பற்றிய அறிவியல் செயல்முறைகளை தெரிந்து கொள்ளும் வகையில் இது அமைந்துள்ளது. பட்டு உலகம் பொழுது போக்கு பூங்காவிற்கு வருகை தரும் குழந்தைகள் கண்டு மகிழும் வகையில் மெய்நிகர் சாதனம் (Virutual reality imaging device) வண்ண பூங்கா அமைந்துள்ளது.

மேலும், இப்பூங்காவில் ரூ.10 இலட்சம் மதிப்பில் Rock Garden மற்றும் ரூ.85 இலட்சம் மதிப்பில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது என அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பட்டு வளர்ச்சித்துறை மண்டல இணை இயக்குநர் நிஷாந்தி, இணை இயக்குநர் பொன்மணி, குன்னூர் நகர்மன்ற தலைவர் திருமதி சுசீலா, உதவி இயக்குநர் செல்வி, உதவி ஆய்வாளர் சபரிஷ் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## பெரம்பலூரில் மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நாளை நடைபெறும் என மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன் அறிக்கை

பெரம்பலூர், மார்ச்.5-
பெரம்பலூர் மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நாளை மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையிலும், கே.என். அருண் நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோரது முன்னிலையில், நாளை, மாலை 4.00 மணிக்கு, பாலக்கரை அருகே உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில்



நடைபெறுகிறது.

இதில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறும், கூட்டத்தில், "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் மார்ச்,9 அன்று நடக்கும் திருச்சி மாநில மாநாடு, மகளிர் படை பிரச்சார பயணம், 2026 சட்டமன்ற தேர்தல் பணி மற்றும் கட்சி ஆக்கப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது என பெரம்பலூர் மாவட்ட திமுக பொறுப்பாளர் வீ ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





## கிராண்ட்லையன் ஊராட்சியில் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

மாதவரம், மார்ச்.5-
மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி மாரியம்மன் கோயில் அருகே கிராண்ட்லையன் ஊராட்சி கிளை கழகம் சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாள் விழா சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி கிளை செயலாளர் சுதாகர் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் முன்னாள் கிராண்ட்லையன் ஊராட்சி மன்ற தலைவர் நா.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் அற்புதராஜ் கலந்துகொண்டு சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புடன் அறுசுவை காலை உணவு வழங்கினார். இதில் திமுக அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



## அய்யா வைகுண்டரின் 194 வது அவதார தின ஊர்வலம்

கன்னியாகுமரி, மார்ச்.5-
கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் இருந்து சாமிதோப்பிற்கு புறப்பட்டு சென்றது... தமிழகம் மற்றும் கேரளாவில் இருந்தும் ஏராளமான அய்யா வழி மக்கள் கலந்து கொண்டனர் இதில் அதிமுக சார்பில் முன்னாள் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்.நாஞ்சில் முருகேசன் மற்றும் மாநகராட்சி அதிமுக மாமன்ற உறுப்பினரும் வடக்கு மண்டல பகுதி.ஆ.தி.மு.க செயலாளருமான. ஸ்ரீலிஜா ஆகியோர் தலைமையில் அய்யா ஊர்வலத்திற்கு மரியாதை செய்யப்பட்டது மேலும் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக அதிப்பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று எடப்பாடியார் மீண்டும் முதலமைச்சராக வேண்டும் என வேண்டிக்கொண்டு அவர்கள் ஏற்பாட்டில் இடலாகுடி,நாயுடு ஆஸ்பத்திரி முன்பு பக்தர்களுக்கு தண்ணீர்,இனிப்பு போன்றவை வழங்கினர்.இதில் அதிமுக பகுதி ஆ தி மு க செயலாளர் வழக்கறிஞர். ஜெயகோபால்,கவுன்சிலர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 29வது வார்டுக்குட்பட்ட கணேசபுரம் குறுக்கு தெரு புலவன்விளை பகுதியில் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்.உடன் துணைமேயர் .மேரிபிரின்ஸிலதா மாமன்ற உறுப்பினர் .மீனாதேவ் பகுதி செயலாளர் சேக்மீரான் வட்ட செயலாளர் .சதீஷ் மொர்வின் தி மு க நிர்வாகிகள் .அச்சுதகணேசன், தகூடி.ஆறுமுகம்,.சுரேஷ், பாலகணபதி .கவியரசு மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் வனத்துறை சார்பாக நாகர்கோவில் ஸ்ரீ ஐயப்பா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற உலக வன உயிரின தின விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பாக பணிபுரிந்த வன அதிகாரிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் . அகஸ்தீசன், வட்ட செயலாளர் இராஜேஷ் குமார் மற்றும் தி மு க நிர்வாகிகள் வன அதிகாரிகள், கல்லூரி மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சோழவரத்தில் ஆதரவற்றோர் இல்லத்தில் அன்னதானம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

மாதவரம், மார்ச்.5-
மாதவரம் தொகுதி சோழவரத்தில் இயங்கிவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணா ஆத்மாலயம் அன்னை ஸ்ரீசாரதா ஆதரவற்றோர் இல்லத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் ஆலோசனையின் பேரில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எத்திராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் ஒன்றிய குழு துணை பெருந்தலைவருமான மீ.வே.கருணாகரன் கலந்துகொண்டு முதியோர்கள், குழந்தைகளுடன் கேக் வெட்டி, அன்னதானம் மற்றும் ஆசிரமத்திற்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருள்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இதில் சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காசிம்முகம்மது, துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட பிரதிநிதி சேகர், கலை இலக்கியம் பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் பரசுராமன், ஆதரவற்றோர் இல்ல நிர்வாகி விசாலாட்சி, ஒருங்கிணைப்பாளர் ஹரி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்



■ கன்னியாகுமரியில் அதிமுக தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரம் வழங்கல் கன்னியாகுமரி நகராட்சி கலைஞர் குடியிருப்பு பகுதியில் அதிமுக தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் தம்பி தங்கம்,கன்னியாகுமரி நகராட்சி அதிமுக கவுன்சிலர் கவுன்சிலர் நித்யா ஆகியோர் தலைமையில் பொதுமக்களிடம் தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.இதில் நிர்வாகிகள் சுயம்பு ,மாடசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## செங்குன்றத்தில் போதைப்பொருள் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி

மாதவரம், மார்ச்.5-
மாதவரம் தொகுதி செங்குன்றம் கூட்டுச்சாலை நேதாஜி சிலை அருகே போதைப்பொருள் இல்லா இந்தியாவிற்கான பிரச்சாரம் போதைப்பொருள் இல்லா இந்தியா மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஆர்.பி. கோதி ஜெயின் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஷெல்டர் டிரஸ்ட் சார்பில் ஆர்.பி.கோதிஜெயின் கல்லூரியின் முதல்வர் மகாலட்சுமி, ஷெல்டர் டிரஸ்ட் இயக்குனர் சாலமன்ராஜ் ஆகியோர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.




நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக ஆவடி காவல் ஆணையரகம்

செங்குன்றம் போக்குவரத்து ஆய்வாளர் சந்திரமௌலி கலந்துகொண்டு மாணவிகளுக்கு போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பின்னர் நாரவாரிகுப்பம் பேரூராட்சி தலைவர் தமிழரசிகுமார் கலந்துகொண்டு விழிப்புணர்வு பேரணியை கொடி அசைத்து துவக்கி வைத்தார். இதனைத்தொடர்ந்து இப்பேரணியில் சுமார் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் போதைப்பொருள் தடுப்பு குறித்த பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பியவாறு செங்குன்றம் கூட்டுச்சாலை முதல் தற்காலிக பேருந்து நிலையம் வரை ஊர்வலமாக சென்று பொதுமக்களுக்கு போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து ஷெல்டர் டிரஸ்ட் சார்பில் விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தப்பட்டு தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் நூற்றுக்கணக்கான பொது மக்களுக்கு போதை பொருள் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர். இதில் திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு பாதுகாப்பு அலுவலர் கனிமொழி, கிரிஜா, போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் நரேஷ், பாஸ்கர், காவல் உதவி ஆய்வாளர் பரமசிவம், சைல்ட்லைன் பிரதிநிதி லதா, ஆர்.பி. கோதிஜெயின் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள் மற்றும் ஷெல்டர் இல்ல பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

வியாழக்கிழமை 05.03.2026

# புளியங்குடியில் முதல்வர் ஸ்டாலின் பிறந்த தின விழா






புளியங்குடி மார்ச். 5-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகர கழகம் சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலினின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு நகர செயலாளர் அந்தோணிச்சாமி தலைமையில் நகர கழக அலுவலகத்தில் வைத்து கேக் வெட்டி கொண்டாடினர்.

இதனை தொடர்ந்து புளியங்குடி பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

இதில் நகர அவைத் தலைவர் வேலுச்சாமிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல்ஹமீது, முன்னாள் நகர் மன்ற தலைவர் வெங்கட்ராமன், ஏ ஆர். அருணாசலம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜராஜன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் மைதீன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பொன்னுதுரைச்சி,

தகவல் தொழில் நுட்ப அணி ஆனந்தராஜ், நகர இளைஞரணி அடைப்பாளர் வழக்கறிஞர் சதீஸ், கவுன்சிலர்கள் கவிதா, கார்த்திகா, வள்ளி அண்ணாமலை, பாலசுப்பிரமணியன் பொறுப்பாளர் பரமசிவம், எஸ்றா, முருகேசன், கலை இலக்கிய பிரிவு துணை அமைப்பாளர் மணிமாறன், மீனாட்சி சுந்தரம், ஞானபண்டிதன், கார்த்திகேயன், முத்தையா, கருத்தப்பாண்டி, வெற்றி, கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பையூரில் விபத்தில் காயமடைந்த திமுக உறுப்பினருக்கு எம்.எல்.ஏ மதியழகன் நிதியுதவி

கிருஷ்ணகிரி, மார்ச்.5-

கிருஷ்ணகிரி மாவட்டம் பையூர் ஊராட்சியை சேர்ந்த திமுக உறுப்பினர் இனியவன் அவர்கள் இருசக்கர வாகன விபத்தில் சிக்கி காலில் கடுமையான காயம் அடைந்தார். இந்த தகவல் அறிந்தவுடன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்டவரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்போது அவர் தனது சொந்த நிதியிலிருந்து மருத்துவ செலவிற்காக உதவித்தொகை வழங்கி, தேவையான சிகிச்சைகள் உடனடியாக மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யுமாறு நிர்வாகிகளிடம் கேட்டுக் கொண்டார். திமுக உறுப்பினரின் உடல்நிலை குறித்து குடும்பத்தாரிடமும் விசாரித்து, தொடர்ந்து கவனம் செலுத்தப்படும் என உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் சுப்பிரமணி, மாவட்டத் துணைச் செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றிய அவைத் தலைவர் இளங்கோ மற்றும் திமுக நிர்வாகிகள் பரத், தமிழ்செல்வம், சிலம்பரசன், சிற்றரசு, உத்திரமணி, சந்திரன், ஊர் கவுண்டர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

விபத்தில் பாதிக்கப்பட்ட கட்சி உறுப்பினருக்கு உடனடி உதவி வழங்கிய எம்.எல்.ஏ அவர்களின் மனிதநேய நடவடிக்கையை பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் பாராட்டினர்.



■ சென்னையில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்ற, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் டாக்டர் சந்தீப் சக்சேனா அவர்களின் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மரக்கன்று, பசுமை கூடைகளை வழங்கி மணமக்களை (ப்ராஷ் ஷாமா) வாழ்த்தினார். இந்த நிகழ்வில், அமைச்சர்கள் எ.வ.வேலு, டி.ஆர்.பி.ராஜா, தங்கம் தென்னரசு, சி.வி.கணேசன் மற்றும் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# சர்வதேச அளவிலான கிக்பாக்ஸிங் போட்டி மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்



தேனி மார்ச். 05-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சர்வதேச அளவிலான கிக்பாக்ஸிங் போட்டி மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் பெற்ற விளையாட்டு வீரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான கிக்பாக்ஸிங் போட்டி டெல்லி இந்திராகாந்தி உள்விளையாட்டு அரங்கத்தில் 04.02.2026 முதல் 08.02.2026 வரை நடைபெற்றது. இப்போட்டியில் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்று 5வெள்ளி, 1வெண்கலம் என பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடத்தப்பட்ட குடியரசு தின போட்டிகள் 2026 (RDG) யில் தேனி விளையாட்டு விடுதி மாணவர்கள் பங்கேற்று, கபாடிப் போட்டியில் 14 வயதிற்குட்பட்ட பிரிவில் தங்கப்பதக்கமும், கூடைப்பந்து போட்டியில் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் வெண்கலப்பதக்கமும், நீச்சல்போட்டிகளில் 2 வெள்ளி, 1. வெண்கலப்பதக்கமும் பெற்றுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அரசின் சார்பில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி சென்னையில் நடைபெற்ற தடகள போட்டியில் பங்குபெற்று தங்கப் பதக்கம் பெற்றமைக்கு தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி வீராங்கனை செல்வி நித்திய ஹரிணி மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களிடமிருந்து ரூ.3 லட்சம் ஊக்கத்தொகையினை (High Cash Incentive) பெற்றுள்ளார்.

விளையாட்டு வீரர்கள் சர்வதேச மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளதை முன்னிட்டு. வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி, மேலும் பல வெற்றிகளை பெற வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர். சிவக்குமார், விளையாட்டு பயிற்றுநர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடம் திறப்பு

## மு.க. ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார் – எம்.எல்.ஏ மதியழகன் குத்துவிளக்கு ஏற்றி பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்



கிருஷ்ணகிரி, மார்ச்.5-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சியில், ஆறாவது மாநில நிதி ஆணையத் திட்டம் 2024–25ஆம் ஆண்டின் கீழ் ரூ.1.19 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 6 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடம், காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்த கட்டிடத்தை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை இருந்து காணொளி வாயிலாக திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ அவர்கள் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குத்துவிளக்கு ஏற்றி கட்டிடத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

புதிய வகுப்பறை கட்டிடம் மூலம் பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விரிவான மற்றும் சீரான கல்வி சூழல் கிடைக்கும் என்பதுடன், கல்வி தரம் மேலும் உயர்வடையும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி, நகர செயலாளர் ஜே கே எஸ் பாபு, காவேரிப்பட்டினம் பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில்குமார், துணைத் தலைவர் மாலினி மாதையன், செயல் அலுவலர் ராணி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், பள்ளியின் தலைமை ஆசிரியர் வேந்தன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் செந்தில் குமார், ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் பாபா மாதையன்,

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர் சசிகலா தசரா, மாவட்ட அபிகவி கோவிந்தராஜ், பர்கத் உள்ளிட்டோர் மற்றும் இருபால் ஆசிரியர்கள், மாணவர்கள், பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.





# சோழவரம் ஒன்றியம் சிறுனியம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள செங்குன்றம் எம்4 போக்குவரத்து காவல் நிலையம் திறப்பு விழா

மாதவரம், மார்ச்.5-

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி மூலமாக பல்வேறு காவல் நிலையங்களை திறந்து வைக்கும் பொழுது, ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட சோழவரம் ஒன்றியம் சிறுனியம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள எம்.4 போக்குவரத்து காவல் நிலையத்தை திறந்து வைத்தார். அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடி அருகே உள்ள சிறுனியம் பகுதியில் ஆவடி ஆணையரகத்திற்கு உட்பட்ட புதியதாக கட்டப்பட்டுள்ள செங்குன்றம் எம்4 போக்குவரத்து காவல் நிலையத்தை போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் சி.சங்கு தலைமை ஏற்று ரிப்பன்வெட்டி திறந்துவைத்து பின்னர் கட்டிடத்தில் சிறப்பு பூஜைகள் செய்து குத்துவிளக்கு ஏற்றிவைத்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர்.மேலும் ஆவடி காவல் ஆணையரக இணை ஆணையர் சிவக்குமார் போக்குவரத்து காவல்நிலையத்தை பார்வையிட்டு வாழ்த்தினர்.இதில் உதவி ஆணையாளர் கனகராஜ், ஆய்வாளர் சந்திரமௌலி, உதவி ஆய்வாளர்கள் நரேஷ், வெற்றிவேல், பாஸ்கர், சமூக சேவகர் புண்ணியசேகர், உதவி ஆணையாளர் எழுத்தர் வெங்கடேசன், எம்4 போக்குவரத்து காவல் நிலைய எழுத்தர் மஹாவீர் உள்ளிட்ட போக்குவரத்து காவலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# சுற்றுலா மேம்பாட்டு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது




கன்னியாகுமரி, மார்ச்.5-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் சுற்றுலா வளர்ச்சி குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா தலங்கள் குமரிக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளன. உள்நாட்டவர் மட்டுமின்றி வெளிநாட்டவர்களும் வியந்து பார்க்கும் வகையில் சுற்றுலா பகுதிகள் ஒவ்வொன்றும் தனித்தனி சிறப்புகளை கொண்டு திகழ்கின்றன. கடல் நடுவே ஒரு பாறையில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், மற்றொரு பாறையில் வானளாவ அமைந்தள்ள அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர சிலை. இவற்றிற்கு பாலமாக அமைந்துள்ள கண்ணாடி பாலம், திற்பரப்பு. மாத்தூர் தொட்டிபாலம், பத்மநாபபுரம் அரண்மனை உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளன.

கன்னியாகுமரி சுற்றுலாத்தலம் உலகப் புகழ் பெற்ற சுற்றுலா மையமாக விளங்கி வருகிறது. இங்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். சுற்றுலா பயணிகளுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை, பேருந்து வசதிகள். குப்பைகளை அகற்றுதல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும். குப்பையில்லா கன்னியாகுமரியாக மாற்ற அனைத்து விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சுற்றுலா துறையின் சார்பில் மாத்தூர், திற்பரப்பு, சிற்றாறு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மார்ச் மாதத்திற்குள் முடிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து கண்ணாடி பாலம் திறந்து வைத்ததைத்தொடர்ந்து. சுற்றுலா பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் நுழைவுச்சீட்டு வாங்குவதற்கு சுற்றுலா பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை இருந்தது. இதனை கருத்தில் கொண்டு, சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஆன்லைன் மூலமாக நுழைவுச்சீட்டு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு. செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுலா பயணிகள் ரத்து செய்யும் நுழைவுச்சீட்டிற்கான பணத்தினை உடனடியாக அவர்களுடைய வங்கி கணக்கிற்கு பணம் வரவு வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள பூம்புகார் கப்பல் போக்குவரத்து மேலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர். அழகுமீனா. தெரிவித்தார்.

நடைபெற்ற கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) .ராகுல்குமார், , மாவட்ட சுற்றுலா அலுவலர் .காமராஜ். பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் .பூபதி. கன்னியாகுமரி நகராட்சி ஆணையாளர் .கண்மணி, செயல் அலுவலர்கள். வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நாங்குநேரி சம்பவம்: சாதியப் படுகொலைக்கு கண்டனம் — ஐந்திணை மக்கள் கட்சி

நாங்குநேரி மார்ச் 05-

திருநெல்வேலி மாவட்டம் ஐந்திணை மக்கள் கட்சி சார்பில் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில், நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் ஆதிக்க சாதி வெறிக்கும்பல் நடத்திய தாக்குதலில் மாற்றுத்திறனாளி ஜான் மற்றும் வடமாநிலத் தொழிலாளி உயிரிழந்தது கடும் கண்டனத்துக்குரியது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆறு பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக கூறப்பட்டுள்ளது.

காவல்துறை, உளவுத்துறை தங்களது கடமையில் தவறியதாகவும், சம்பவத்தை சாதாரண மோதலாக சித்தரிக்க முயல்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குற்றவாளிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்தல், பொறுப்பான அதிகாரிகளுக்கு நடவடிக்கை, பாதிக்கப்பட்டோருக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம், சட்டவிரோத மதுரூபோதை ஒழிப்பு ஆகிய கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. நடவடிக்கை எடுக்காவிட்டால் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என கட்சி எச்சரித்துள்ளது.

# மானாமதுரை பேருந்து நிலைய நடைபாதையில் பைக் நிறுத்துவோருக்கு எச்சரிக்கை: போக்குவரத்து காவல்துறை அதிரடி

மானாமதுரை மார்ச். 05-



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் நடைபாதையை ஆக்கிரமித்து நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் அவதி

சிவகங்கை மாவட்டத்தின் முக்கிய போக்குவரத்து மையமாக விளங்கும் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர். இங்கு பயணிகள் நடந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட நடைபாதைகளில், சமீபகாலமாக இருசக்கர வாகனங்களை நிறுத்துவது அதிகரித்துள்ளது. இதனால் பேருந்து ஏற வரும் முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

காவல்துறை அறிவிப்பு

இது குறித்து புகார்கள் எழுந்ததையடுத்து, போக்குவரத்து காவல்துறை சார்பில் தற்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

* ஆக்கிரமிப்பு தடை: பயணிகள் நடக்கும் நடைபாதைகளில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இருசக்கர வாகனங்களை நிறுத்தக் கூடாது.

* அபராத நடவடிக்கை: எச்சரிக்கையை மீறி வாகனங்களை நிறுத்துவோர் மீது போக்குவரத்து விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும்.

* வாகன பறிமுதல்: நடைபாதையில் இடையூறாக இருக்கும் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, உரிமையாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

"பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் வசதியைக் கருத்தில் கொண்டு, வாகன ஓட்டிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரத்யேக வாகன நிறுத்தங்களில் மட்டுமே வண்டிகளை நிறுத்த வேண்டும்" என காவல்துறை தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பொதுக் கழிப்பறை பூட்டியே இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் தினமும் பயணம் மேற்கொள்ளும் பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் கடும் சிரமம் அனுபவித்து வருகின்றனர்.அவசர தேவைக்காக பயன்படுத்த முடியாத நிலை காரணமாக பயணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். உடனடியாக கழிப்பறையை திறந்து பராமரிப்பு செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும், மாவட்ட அறங்காவலருமான ஏ.ஆர். ஜெயமூர்த்தி, எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மானாமதுரை தனித் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார்.இதற்காக, சென்னை தேனாம்பேட்டையிலுள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில், உரிய முறைப்படி தனது விருப்ப மனுவை அவர் அளித்தார். நீண்ட காலமாக கட்சிப் பணியாற்றி வரும் இவர், தொகுதி மக்களிடையே நன்கு அறிமுகமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பது குறித்த மாவட்ட நுண்ணறிவு குழு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், வருமான வரித்துறை துணை ஆணையர் (சென்னை) / கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சிவாஜி யாதவ், உதவி வன பாதுகாப்பு அலுவலர் பசவ சிங் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# இனிமேல் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சிதான் திமுக வில் இணைந்த ஓபிஎஸ் அணி ஒன்றிய செயலாளர் பெருங்குடி முருகேசன் பெருமிதம்

சிவகங்கை மார்ச் . 05-



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வடக்கு ஒன்றியம் பெருங்குடி மற்றும் மதகுபட்டி கிராமங்களில் இருந்து சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட அதிமுக . காங்கிரஸ். ஓபிஎஸ் அணி நிர்வாகிகள் தாய்க்கழகமாம் திமுகவில் தம்மை இணைத்துக் கொண்டனர்..

தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் . மாவட்டக் கழக செயலாளர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையிலும் . சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் முன்னிலையிலும். ஓபிஎஸ் அணி ஒன்றிய செயலாளர். பெருங்குடி ஊராட்சி மேனாள் தலைவர் . சிவகங்கை மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர். நாமனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் பெருங்குடி நா.முருகேசன் தம்முடன் அதிமுக. காங்கிரஸ். அமமுக. ஓபிஎஸ் அணி நிர்வாகிகள் என ஐம்பதிற்கும் மேற்பட்டோர்களுடன் தாய்க்கழகமாம் திமுகவில் இணைத்துக் கொண்டனர்...

இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட திமுக துணைச் செயலாளர் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் . அலவாக்கோட்டை கிளைக் கழக பொறுப்பாளர் அலவை நாகராஜன். மாவட்ட பிரதிநிதி ஒக்கூர் லெ.சோமசுந்தரம்.ஒன்றிய பொருளாளர் தொமுச மின் திட்ட செயலாளர் இபி.முருகேசன். மாவட்ட தொண்டரணி மேனாள் கவுன்சிலர் வண்டவாசி கா.கோவிந்தராஜன் . மாவட்ட விவசாய தொழிலாளரணி ஊராட்சி மேனாள் தலைவர் தமறாக்கி ரவி . இளைஞரணி ஒன்றிய அமைப்பாளர் இடையமேலூர் வேல்முருகன். உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் உடனிருந்தனர்...

இந்த நிர்வாகிகளுடன் செந்தாமரைச்செல்வி. ராகேஷ்குமார்.

ரமேஷ்குமார். சரவணன்.மணிகண்டன் . முருகானந்தம். சுரேஷ்பாண்டி .பிரபு . ராஜா . நாகராணி . அழகம்மாள் . கருங்கம்மாள். செந்தில் நாயகன்.ப்ரியா. நந்தினி. அம்மாக்கண்ணு . அஞ்சலா. முத்துலெட்சுமி. செந்தில் கணேஷ். மலர்விழி . கலைச்செல்வி. கணேஷ்வரி.கற்பகம் . சாந்தி. ரேவதி. வெங்கடேஷ்வரன். நாகஜோதி. வெங்கடேஸ்வரன் . ரமேஷ். குழந்தைவேலு உள்ளிட்ட ஐம்பதிற்கும் அதிகமானோர் தங்களை திமுக வில் இணைத்துக் கொண்டனர்...

அப்போது நம்மிடம் பேசிய முருகேசன்.சிறந்த முறையில் மக்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சிதான் தலைசிறந்த ஆட்சியாக உள்ளது எனவும். இனிவரும் காலங்களில் திமுக வால் மட்டுமே நல்லாட்சியைக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.. தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர்.மாவட்டக்கழக செயலாளர்.கேஆர். பெரியகருப்பன் மற்றும் ஆற்றல் மிகு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் உள்ளிட்ட ஒன்றியக்கழக நிர்வாகிகள் அனைவருக்கும் தமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்...




# சிவகங்கையில் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி

சிவகங்கை.மார்ச்.5-

பள்ளிக்கல்வித்துறையின் மகிழ் முற்றம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை புனித மைக்கேல் பதின்மமேல்நிலைப் பள்ளி இணைந்து மாவட்ட அளவிலான மைக்கேல் அறிவியல் கண்காட்சி விழாவை சிறப்பாக கொண்டாடினர். மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளிலிருந்து அறிவியல் கண்காட்சியில் மாணவ மாணவிகள் தங்களின் படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர். நடுவர்களாக முனைவர் சிவா முனைவர் சேவற்கொடியோன் முனைவர் கற்பகம் பேராசிரியர் ஆதிமூலம் சிறப்பாக ஆய்வு செய்து மாணவ மாணவிகளை உற்சாகப்படுத்தினர். பள்ளியின் நிர்வாகி ஜான் பிரிட்டோ அமலான் அனைவரையும் வரவேற்றார். சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் வடிவேல் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். பங்கேற்கூஷ அனைத்து மாணவ ந் மாணவிகளுக்கும் பங்கேற்பாளர் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கபட்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயற்குழு உறுப்பினர் முனைவர் கோபிநாத் மாவட்டச் செயலாளர் பிரபு மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் சிவகங்கை

கிளைத் தலைவர் மணவாளன் கிளைச் செயலாளர் ராஜா சரவணன் வானவில் மன்ற கருத்தாளர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பள்ளியின் முதல்வர் ஜெயந்தி மகிழ் முற்றம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ தமிழ்நாடு அறிவி யல் இயக்கம் மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி அறிவியல் கண்காட்சிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர். பள்ளியின் துணை முதல்வர் குணசேகரன் நன்றி கூறினார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் சார்பில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான உழைப்பாளர் நலக்கூடத்தை திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், பெத்தானியபுரம் அருகே அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் உடன் உள்ளார்.




# இலங்கை கடல்பகுதியில் ஈரான் கப்பல் மீது அமெரிக்கா தாக்கியதில் கடலில் மூழ்கி 101 பேரை காணவில்லை என தகவல்

கொழும்பு :, மார்ச்.5-

இலங்கை கடல்பகுதியில் ஈரான் கப்பல் மீது அமெரிக்கா தாக்கியதில் கடலில் மூழ்கி 101 பேரை காணவில்லை என தகவல் வெளியாகி உள்ளது. கடலில் தத்தளித்த 30 பேரை இலங்கை கடற்படை உயிருடன் மீட்ட நிலையில் மற்றவர்களை தேடும் பணி தீவிரம் அடைந்துள்ளது. ஈரான் கப்பல் மீது நீர்மூழ்கிக் கப்பல் மூலம் அமெரிக்க கடற்படை தாக்குதல் நடத்தியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# சிவகங்கை நகராட்சி: 5ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நகர்மன்றம் மருதுபாண்டியர் சிலை அமைத்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்

சிவகங்கை மார்ச். 05-



சிவகங்கை நகராட்சியில் திமுக தலைமையிலான நகர்மன்றம் பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்து, இன்று 5 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்தச் சிறப்புமிக்க ஐந்தாம் ஆண்டின் முதல் நகர்மன்றக் கூட்டம் இன்று நடைபெற்றது.

முக்கியத் தீர்மானம்: மருதுபாண்டியர்களுக்குச் சிலை

இக்கூட்டத்தில், சிவகங்கை மண்ணின் வீரத் தியாகிகளான மாமன்னர்கள் மருதுபாண்டியர்களுக்கு முழு உருவ வெண்கலச்சிலை அமைத்துக் கொடுத்த தமிழக அரசுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஏற்கனவே நடைபெற்ற நகராட்சி சாதாரண கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில், தற்போது சிலை அமைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பின்வருவோருக்கு நகர்மன்றம் சார்பில் நன்றிகள் பதிவு செய்யப்பட்டன:

* முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: மருதுபாண்டியர்களின் வீரத்தைப் போற்றும் வகையில் முழு உருவ வெண்கலச்சிலை அமைத்துத் தந்தமைக்காக.

* அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் (கூட்டுறவுத்துறை): இத்திட்டம் நிறைவேறப் பேருதவியாக இருந்தமைக்காக.

* அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா (தொழில்துறை): சிலையமைக்கும் பணிகளில் முக்கியப் பங்காற்றியமைக்காக.

* தஞ்சை சிவானந்தம் (தமிழ்நாடு கேபிள் டிவி வாரியத் தலைவர்): இப்பணி சிறப்பாக அமையத் துணை நின்றமைக்காக.

நிர்வாகத் தொடர்ச்சி

கடந்த நான்கு ஆண்டுகளில் நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்தும், 5ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. நகர்மன்றத் தலைவர், ஆணையர், மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், சிவகங்கை நகரின் முக்கிய அடையாளமாக இந்தச் சிலை அமைந்திருப்பது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

› குறிப்பு: 5ஆம் ஆண்டின் தொடக்கமே நன்றியறிதலுடன் தொடங்கியிருப்பது சிவகங்கை நகர்மன்ற வட்டாரத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161